# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,586 — 1940 ம் ஹு பங்குனிமீ 8 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### அசாட்சியாரின் விளம்பரம்.

ஸ்தல யாத்திரையைப் பற்றிய சட்டம்.

*சந்தானா நாயகியின் திருவிழாவுக்காகிய பிரமாணங்கள்.*

*ஸ்தல யாத்திரைச் சட்டத்தின் (அத்தியாயம் 133) 2 ம் பிரிவால் எமக்களிக்கப்பட்ட தத்துவத்தைக் கொண்டு, 1940 ம் ஆண்டு சந்தானா தேவியின் பங்குனி திருவிழாவுக்காக தலைவில்லுக்கு வழக்கமான யாத்திரையை நோக்கி, இலங்கை தேசாதிபதி, அன்டுறூ கல்டிகொற் ஆகிய நான் இவ்விளம்பரத்தால் கீழ்க்காணும் பிரமாணங்களை ஆக்கு கிறேன்.*

அ. கொல்டிகொற்,
தேசாதிபதி.

கொழும்பு, 1940 ம் ஆண்டு மாசிமீ 29 ந் உ.

மேற்குறித்த ஒழுக்கவிதிகள்.

1. இந்த விதிகளில் " வாடியின் இடப்பரப்பு என்ற வசனம் கீழே கூறப்படும் டாப்பில் விவரித்திருக்கும் எல்லைகளுக்குள் ளடங்கிய விசாலத்தைக் கருதும்."

" உதவி அரசாட்சி ஏசன்றர் " என்பது புத்தளஞ் சிலாபம் டிஸ்திறிக்கு களின் உதவி அரசாட்சி ஏச்ன்றரைக் குறிக்கும்.

2. உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளையின்படி வாடி வீடு கட்டக்கூடாதென்று விலக்கி வைக்கப்பட்ட வாடி யின் இடப்பரப்புக்குள் உள்ள எந்த இடத்திலும் ஒருவரும் வாடிவீடு கட்டப்படாது.

3. உதவி அரசாட்சி ஏசன்றரினால் அல்லது அவரின் அனுமதியுடன் அதற்காக அமைக்கப்பட்ட இடங்களிற் தவிர வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறு இடங்களில் ஒருவரும் மலஞ்சலங் கழிக்கப்படாது.

4. உதவி அரசாட்சி ஏசன்றரால் அல்லது அவரின் அனுமதியுடன் குப்பை போடுவதற்காக அமைத்து வைக்கப்பட்ட இடத்தில் அல்லது பாத்திரத்தில் ஒழிய, வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள வேறொரு இடத்திலும் ஒருவரும் தண்ணீர்ப் பதார்த்தமான அல்லது கட்டிப் பதார்த்தமான கழிவு எதையும் அல்லது வேறெவ்விதமான குப்பையை யும் போடப்படாது.

5. (*a*) அடிக்கப்படும்படி அங்கே கொண்டுவரப்பட்டவைகளும் உதவி அரசாட்சி ஏசன்றரின் விசேடமான அல்லது பொதுவான கட்டளைப்படி அவ்விடப்பரப்புக்குள் வைத்துக்கொள்ள இடங் கொடுக்கப்பட்டவைகளு மான ஆடு மாடுகளைத் தவிர வேறு ஆடு மாடுகளை வாடியின் இடப்பரப்புக் குள் ஒருவரும் வைத்திருக்கப்படாது.

(*b*) உதவி அரசாட்சி ஏசன்றரால் ஒரு மாட்டுக்காலையாக விசேஷமாய் நியமிக்கப்பட்ட அல்லது அப்படிப் பாவிக்கலாமென்று உத்தரவு கொடுக் கப்பட்ட ஓர் இடத்திற் தவிர மற்றப்படிக்கு வாடியின் இடப்பரப்பின் சமீபத்தில் ஆடு மாடுகளை வைத்திருக்கப்படாது.

(*c*) அவ்வாடுமாடுகளைத் தன் பொறுப்பில் வைத்திருப்பவன் சாணம் முதலியவற்றை அதற்கென்று நியமிக்கப்பட்ட அதிசமீபத்திலுள்ள இடத் தில் போடுவிக்க வேண்டும். மேலும் அவன் தன்னுடைய ஆடு மாடுகள் நிற்குமிடத்தை எப்பொழுதுந் துப்பரவாய் வைத்திருக்க வேண்டும்.

6. வாடியின் இடப்பரப்புக்குள் விற்கப்படும் எல்லாவிதச் சாப்பாடு களும் ஈ இலையான் விழாமலும் தூசி படியாமலும் இருக்கும்படி (*a*) சுத்தமான கடுதாசியால் அல்லது சீலையால் மூடிவைக்கப்படல் வேண்டும் அல்லது (*b*) கண்ணாடிப் பெட்டிகளுக்குள் வைக்கப்படல் வேண்டும் அல்லது (*c*) வைத்திய உத்தியோகஸ்தரால் அல்லது வாடி வீட்டு இடப்பரப்பின் பொறுப்பேற்றிருக்கும் சுகாதார உத்தியோகஸ்தரால் அனுமதிக்கப்பட்ட வேறு எவ்விதமான மூடிப்பெட்டிகளுக்குள்ளும் வைத்திருக்கப்படல் வேண்டும்.

7. வாடியின் இடப்பரப்பின் சுத்தத்துக்குக் கேடு வருவிக்கத்தக்க ஆட்களுக்கும், தொத்துவியாதியுள்ள ஆட்களுக்கும் வாடியின் இடப் பரப்புக்குட் போகிறதற்கு உத்தரவு கொடுக்கப்படாது.

8. வாடியின் இடப்பரப்புக்குள் திருவிழா நாட்களில் ஏதுங் கொள்ளை நோய் உண்டாகக் கண்டால், உதவி அரசாட்சி ஏசன்றர், ஸ்தல் யாத்தி ரைக்காரரை, யாத்திரை ஸ்தலத்தை விட்டுப் போகும்படி செய்தும், அவா கள் அங்கிருந்து எப்பாதைகளாலும் எவ்விதமாயும் போகவேண்டு மென்றும் விதிக்கலாம்.

9. (*a*) வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் தொத்து வியாதியுள்ள ஒவ்வொருவனும் அல்லது (*b*) அப்படிப்பட்ட வியாதியால் வருந்துகிறவ னுடன் அவனுக்கு அவ்வியாதி உண்டென அறிந்துகொண்டு வசிக்கிற ஒவ்வொருவனும் அந்தச் சங்கதியை டாக்குத்தருக்கு அல்லது சுகாதார உத்தியோகஸ்தருக்கு அறிவிக்க வேண்டும்.

10. வாடியின் இடப்பரப்புக்குள் உள்ள ஒரு குளத்தை அல்லது கிணற்றை ஒரு குறிக்கப்பட்ட நோக்கத்துக்கென்று புறம்பாக வைத்து அதைக்குறித்து ஒரு விளம்பரம் அவ்விடத்தில் வெளியாக வைக்கப்பட் டிருந்தால் அக்குளத்தை அல்லது அக்கிணற்றை அது புறம்பாக வைக்கப் பட்ட நோக்கத்துக்கே அன்றி வேறெந்த நோக்கத்துக்கேனும் ஒருவரும் உபயோகிக்கப்படாது.

11. உதவி அரசாட்சி ஏசண்டரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் பாண் போறணை, சோடாமோள், கோப்பி தேநீர் கடைகள், சாப்பாட்டுக் கடைகள், அல்லது காலைகள் வாடியின் இடப்பரப்புக்குள் வைக்கப்படாது. அவ் லைசென்ஸ் செலவின்றிக் கொடுக்கப்படும்.

12. உதவி அரசாட்சி எசன்றரிடமிருந்து அனுமதிச்சீட்டு அதாவது லைசென்ஸ் ஏற்கனவே பெற்றுக்கொள்ளாமல் ஒருவராகிலும் கொட்டில் கட்டவும், வாடியின் இடப்பரப்புக்குள் இருக்கும் பிரதான அல்லது மற்றைய தெருக்களின் எல்லைக்குட் செல்லக்கூடியதாய் எக்கட்டடத்தைப் பெருப்பிக்கவும் படாது.

13. உதவி அரசாட்சி எசன்றரிடமிருந்து ஏற்கனவே அனுமதிச்சீட்டு அல்லது லைசென்ஸ் பெறாமல் ஒருவராகிலும் வாடியின் இடப்பரப்புக்குள் அல்லது அவ்விடப்பரப்பின் எல்லையிலிருந்து ஒரு மைல் தூரத்துக்குள் உள்ள இடத்துக்குள் எவ்வித துப்பாக்கி சுடவேனும் வாணங்கள் விடவேனும் படாது.

14. உதவி அரசாட்சி எசன்றரின் அனுமதியுடன் அமைத்திருக்கும் இடத்தில் தவிர வேறு ஒரு இடத்திலும் வாடியின் இடப்பரப்புக்குள் ஒருவராகிலும் ஆடுமாடுகள் அடிக்கப்படாது. அப்படி அமைத்திருக்குமிடங்களில் ஆடு மாடு அடிப்போர் அவ்விடத்தைத் துப்பரவாய் வைத்திருக்க உத்தரவாதமுடையவர்களாயிருத்தல் வேண்டும்.

இடாப்பு.

தலைவில்லுவாடி இடப்பரப்பின் எல்லைகள் :—

வடக்கு : தலைவில்லு ஓடை ;

தெற்கு : எத்தாலை தலைவில்லும், தேலிக்குடா தலைவில்லும் அடிப்பாதைகள் எறும்புக்குடலில் வந்துசேருஞ் சந்தியிலிருந்து நேர்மேற்குப்புறம்பாகக் கடலுக்குபோகும் அடிப்பாதை ;

கிழக்கு : பண்டாரம் கருக்குவச்சான் பெரிய தோட்டம் வழிகள் ;

மேற்கு : கடல்.

எத்தாளைவாடி இடப்பரப்பின் எல்லைகள் :—

வடக்கு : தேறிக்குடாவிலிருந்து நேர்மேற்குப் புறமாய் மணல் அணைக்குப்போகும் அடிப்பாதை ;

கிழக்கு : சிறு கடல் ;

தெற்கு : சுருவிஅளை ;

மேற்கு : மணல் அணை.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரம்.

1876 ம் ஞூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கல்வத்துறை-குக்குள்கோறளை கிராமச் சங்கத் தெருவுக்கு என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

மலை அளவு பிரதமபடத்து இல 3, துண்டு 1. குறிச்சி—தெல்மெல்ல.

| துண்டு. | காணியின் பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 614 | இங்குருபடவெற்றிய .. | சேனை .. .. | தெல்மலை வாசியர்ன சதுஹக்குருகே பொடியா .. | 0 | 0 | 3·6 |
| 615 | — .. | கிராமச்சங்கத் தெரு .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 15·3 |
| 616 | கங்குருபடவெற்றிய .. | சேனை .. .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 1·3 |
| 617 | ஷை .. | ஷை .. .. | ஷை .. .. .. | 0 | 0 | 5·9 |
| 618 | ஷை .. | ஒரு வயதுள்ள ஒரு பலாமரமுள்ள சேனை | ஷை .. .. .. | 0 | 0 | 1·7 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஞூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இத்தைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ் செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1940 ம் ஞூ (ஏப்பிறல்) சித்திரைமீ 2 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு இங்கிரியாக் கிராமக் கோட்டில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

களுத்துறைக் கச்சேரி,
1940 ம் ஞூ (மார்ச்சு) பங்குனிமீ 5 ந் ௳.

எச். ஈ. றென்னகூன்,
களுத்துறை மேல் உதவி அரசாட்சி எசண்டு.

## வித்தியா பகுதியைப்பற்றிய அறிவித்தல்.

வித்தியாபகுதி : கட்டடவேலைகள்.

பின்வரும் கட்டட வேலைகள் செய்வதற்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1940 ம் ஆண்டு பங்குனி மாதம் 26 ந் தேதி செவ்வாய்க்கிழமை பகல் 12 மணிவரை கீழ்ப்பெரும்பாக வித்தியாதரிசி அவர்களால் ஏற்கப்படும்.

இதைப்பற்றிய படங்களுக்கும் இன்னும் தேவையான விவரங்களுக்கும் பெரும்பாக வித்தியாதரிசி, வித்தியா கந்தோர், மட்டக்களப்பு என்ற விலாசத்திற்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும்.

வேலைகளின் விவரங்கள்.

ஒவ்வோரிடத்திலும் பாடசாலைக் கட்டடம், ஆசிரியர் வீடு, மலசலகூடம் முதலியன கட்டுவதற்கு மட்டக்களப்புப் பகுதியில் :—

அக்கரைப்பற்று அரசினர் பாடசாலை
மருதமுனை ,, ,,
வாழைச்சேனை ,, ,,
கொசப்பொலை ,, ,,

திருகோணமலைப் பகுதியில் :—

திருகோணமலை அரசியனர் பாடசாலை

எல். மெக்டி. றொபிசன்.
1940 ம் ஞூ மார்ச்சுமீ 8 ந் ௳. வித்தியாதிகாரி.

கீழ்க்காணும் இடங்களில் பாடசாலைக் கட்டடமும் ஆசிரியருக்கு வீடும், மலசலகூடமும், கிணறும் கட்டுவதற்கு ஒப்பந்தக் கேள்விப்பத்திரங்கள் 1940 ம் ஞூ பங்குனிமீ 26 ந் தேதி பகல் 12 மணிவரை வடமேற் பெரும்பாக வித்தியாதரிசி அவர்களால் ஏற்கப்படும் :—

P/வல்பாலுவ, A/தெமுன்னவ, Ku/தெமட்டகொல்ல, Ch/கட்டுக்கெந்த (ஆசிரியருக்கு வீடு), A/கிரிந்திவத்த, A/மகாதியுல்வெவ, Ch/மாதம்பை, Ku/கொஸ்வத்தை, A/துருவில்ல, A/தம்பல, Ku/பமுனுகொட்டுவ (ஆசிரியர் வீட்டைப் பெரிதாகக்கட்டுவதற்கு, A/கடவத்தம, A/பள்ளியகொடல, Ku/கியுல்கல்ல, P/மூனமல்கஸ்வெவ, A/கப்புகொல்லெவ, Ku/உலோகெதர, A/கும்புக்வெவ, Ch/லுனுவில, Ku/கும்புக்கெற்ற.

படங்களுக்கும் வேலை நடத்தவேண்டிய விதத்துக்கும் வேறு விபரங்களுக்கும் பெரும்பாக வித்தியாதரிசி, வித்தியா கந்தோர், குருணாக்கல் என்ற விலாசத்திற்கு விண்ணப்பஞ்செய்தல் வேண்டும்.

குறிப்பு.—" P " என்பது புத்தளப் பகுதியையும், " A " என்பது அனுராதபுரப்பகுதியையும், " Ku " என்பது குருணாக்கல் பகுதியையும், " Ch " என்பது சலாபப் பகுதியையும் குறிக்கும்.

எல். மெக்டி. றொபிசன்,
1940 ம் ஞூ பங்குனிமீ 9 ந் ௳. வித்தியாதிகாரி.

## உத்தியோக சம்பந்தமில்லாதவர்களின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக் சியனகோறளை வணவாளையில் இருக்கும் தெடிகம தேவகே எமலின் சந்திரவதியாகிய நான் 1907 ம் ஞூ 1 ம் இலக்கக்கட்டளைச் சட்டத்தின் ஷெடுலே 1. B. ரூல் 2 வதின் பிரகாரம் இத்தால் நான் அறிவித்தல் கொடுக்கிறதாவது, நான் இன்றுதினமிருந்து 3 மாதங்களுக்குப்பின் அனுராசபுர டிஸ்திறிக்கில் சிங்களப்பாஷையில் பிரசித்த நொத்தாரிஸ் உத்தியோகஞ்செய்ய அனுமதிகேட்டு றெஜிஸ்டார் மனுச்செய்துகொள்வேன்.

ட. எமலின் சந்திரவதி.

1940 ம் ஞூ பெப்றுவரிமீ 23 ௳.